## மூன்றாம் இடைப்பருவத் தேர்வு

மதிப்பெண்: 50

தமிழ்

வகுப்பு - ஏழு - ________ நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: | மாணவன்/மாணவி பெயர்: |
| இடம்: | வரிசை எண்: |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. உழவர் சேற்று வயலில் ______________ நடுவர்.

   அ) செடி ஆ) பயிர் இ) மரம் ஈ) நாற்று

2. 'ஞானச்சுடர்' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

   அ) ஞான + சுடர் ஆ) ஞானச் + சுடர் இ) ஞானம் + சுடர் ஈ) ஞானி + சுடர்

3. மரம் வளர்த்தால் ______________ பெறலாம்.

   அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி

4. 'இளமை' - என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ______________

   அ) முதுமை ஆ) புதுமை இ) தனிமை ஈ) இனிமை

5. வயலில் விளைந்து முற்றிய நெற்பயிர்களை ______________ செய்வர்.

   அ) அறுவடை ஆ) உழவு இ) நடவு ஈ) விற்பனை

6. இடர் ஆழி நீங்குகவே - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் __________

   அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) இன்பம்

7. திருநெல்வேலி ______________ மன்னர்களோடு தொடர்பு உடையது.

   அ) சேர ஆ) சோழ இ) பாண்டிய ஈ) பல்லவ

8. காந்தியடிகள் எப்போதும் ______________ப் பேசினார்.

   அ) வன்சொற்களை ஆ) அரசியலை இ) கதைகளை ஈ) வாய்மையை

9. 'மாரி + ஒன்று' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________

   அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று இ) மாரியின்று ஈ) மாரியன்று

10. இளங்கோவடிகள் ______________ மலைக்கு முதன்மைக் கொடுத்துப் பாடினார்.

    அ) இமய ஆ) கொல்லி இ) பொதிகை ஈ) விந்திய

**II. அ) மனப்பாடப்பாடல்.** 1 × 4 = 4

11. 'விருந்தோம்பல்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**ஆ) கடிதம் வரைக.** 1 × 5 = 5

12. திருவிழாவுக்கு அழைப்பு விடுத்து உறவினருக்கு கடிதம் வரைக.

**III. அ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

13. உவமை, உவமேயம், உவம உருபு விளக்குக.
14. பொய்கை ஆழ்வார் எதற்காகப் பாமாலை சூட்டுகிறார்?
15. உழவர்கள் எப்போது நண்டு பிடித்தனர்?
16. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.
17. கொற்கை முத்து பற்றிக் கூறுக.
18. நீக்க வேண்டிய களை என்று அறநெறிச்சாரம் எதனைக் குறிப்பிடுகிறது?

**ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

19. திருநெல்வேலியின் புவியியல் அமைப்புப் பற்றிக் கூறுக.
20. பூதத்தாழ்வார் ஞானவிளக்கு ஏற்றும் முறையை விளக்குக.
21. உழவுத்தொழிலின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுதுக.
22. இளம் வயதிலேயே செய்ய வேண்டிய செயல்களாக முனைப்பாடியார் கூறுவன யாவை?

**IV. வினாக்களுக்கு ஏற்ப விடையளி.**

23. வினைச்சொற்களை எடுத்து எழுதுக. 6 × 1 = 6

அ) விமானம் வானில் பறந்தது.
ஆ) நான் நன்றாகப் படிப்பேன்.
இ) சிறுமிகள் பந்து விளையாடினர்.
ஈ) கலா நன்றாகப் பாடுவாள்.
உ) அம்மா கடிதம் எழுதினாள்.
ஊ) காலையில் சீக்கிரம் எழுதல் வேண்டும்.

24. பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக. 2 × 1 = 2

அ) பிடிக்கிறாங்க ஆ) வாரான்

25. கட்டங்களை நிரப்புக. 4 × 1 = 4

| தொடர்கள் | உவமை | உவமேயம் | உவம உருபு |
|---|---|---|---|
| மலரன்ன பாதம் | | | |
| தேன் போன்ற தமிழ் | | | |
| புலி போலப் பாய்ந்தான் சோழன் | | | |
| மயிலொப்ப ஆடினாள் மாதவி | | | |